"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.63,67,15,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

பிற்பகல் 2-05

7. அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அளிக்கும் விருந்திற்குச் செல்லப் பேருந்து வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று (7-5-2008) இரவு 7-30 மணிக்கு, சென்னை, தாஜ் கோரமண்டல் ஓட்டலில் விருந்து அளிக்கவுள்ளார்கள். இது குறித்த அழைப்பிதழ்கள் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அனைவரும் அவ்விருந்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொள்வதற்கு வசதியாக, சட்டமன்றக் குடியிருப்பு வளாகம், 'D' Block-லிருந்து, இன்று மாலை 6-30 மணி, 6-40 மணி, 6-50 மணி மற்றும் 7-00 மணியளவில் நான்கு பேருந்துகள் புறப்படும் என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008 மே 7] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-5-2008) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

190. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

191. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

192. மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

193. கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய செயல் முறைத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

194. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய "மக்கள் சாசனம்" 2008. (தமிழ், ஆங்கிலம்)

195. மானியக் கோரிக்கை எண் 18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

196. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)